வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ஈழநாடு



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 16.04.2026 வியாழக்கிழமை | இதழ் : 100 | பக்கங்கள் : 08

## பயணிகளை ஏற்றாமல் சென்ற நெடுந்தாரகை படகால் குழப்பம்

யாழ்ப்பாணம், ஏப். 16

நெடுந்தீவு-குறிகாட்டுவான் பயணிகள் படகுச் சேவை வையை முன்னெடுத்த நெடுந்தாரகை படகு 50 இற்கும் மேற்பட்ட பயணிகளை மாவிலி துறைமுகத்தில் ஏற்றாது விட்டுச் சென்றதனால் அங்கு குழப்பநிலை ஏற்பட்டது.

நேற்று பிற்பகல் 3.00 மணிக்கு, நெடுந்தாரகை படகு, நெடுந்தீவின் மாவிலித் துறைமுகத்தில் இருந்து சேவையை முன்னெடுத்திருந்தது.

நேற்றைய நாளின் இறுதிச் சேவையாக இச் சேவை இருந்ததால், மக்கள் யாழ்ப்பாணம் நோக்கி வருகை தர அதிகளவில் கூடியிருந்தனர்.

07



## வடமாகாண திணைக்களங்களை கண்காணிப்பதற்கு விசேட குழு!

### ஆளுநரின் நேரடி தலைமையின் கீழ்

யாழ்ப்பணம், ஏப். 16

வடக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் திணைக்களங்களின் செயற்பாடுகளைக் கண்காணிக்கவும், பொதுமக்கள் முன்வைக்கும் முறைப்பாடுகள் குறித்து முறையான விசாரணைகளை முன்னெடுக்கவும் ஆளுநரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் விசேட குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினருக்கும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் இடையிலான முதற்கட்டக் கலந்துரையாடல், நேற்று புதன்கிழமை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின் போது ஆளுநர் வழங்கிய முக்கிய வழிகாட்டல்கள் வருமாறு-

மாகாண சபை நிர்வாகத்தின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புவதும், அரச சேவைகள் எவ்விதத் தடங்கலுமின்றி மக்களைச் சென்றடைவதை உறுதி செய்வதுமே இக்குழு உருவாக்கத்தின் பிரதான நோக்கமாகும். ஆளுநர் செயலகத்துக்குத் தினமும் ஏராளமான முறைப்பாடுகள் கிடைக்கின்றன. இவை குறித்து அந்தந்தத் திணைக்களங்களுக்கு அறிவுறுத்தினாலும், உரிய காலப்பகுதிக்குள் தீர்வுகள் எட்டப்படுவதில்லை.

07



## இலங்கையின் தந்திரத்துக்கு இசைந்து உங்களை பலவீனப்படுத்தவேண்டாம்!

### சர்வதேச கட்டமைப்புக்களிடம் பிரித்தானிய தமிழர் பேரவை வலியுறுத்தல்

லண்டன், ஏப். 16

இலங்கையில் அரசினாலும், அரச கட்டமைப்புகளினாலும் இழைக்கப்பட்ட பாரதூரமான குற்றங்கள் தொடர்பில் உள்நாட்டு குற்றவியல் நீதிப்பொறிமுறைகளின் ஊடாக அர்த்தமுள்ள பொறுப்புக்கூறலை உறுதி செய்யமுடியாது.

இவ்விடயத்தில் இலங்கையின் தந்திரத்துக்கு இசைந்துகொடுத்து சர்வதேச கட்டமைப்புக்கள் தம்மைப் பலவீனப்படுத்திக்கொள்ளக்

07

## சதித் திட்டங்களை முறியடித்து தையிட்டி நிலங்களை மீட்போம்!

### யாழில் சிவில் சமூகப் பிரதிநிதிகள், அரசியல் தலைவர்கள் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஏப். 16

அரசின் இத்தகைய சதித்திட்டங்களை முறியடித்து, ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தையிட்டி நிலங்களை முழுமையாக மீட்பதற்கான அடுத்த கட்ட நகர்வுகள் மற்றும் சட்டப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என சிவில் சமூகப் பிரதிநிதிகள், அரசியல் தலைவர்கள் ஆலோசனை முன்வைத்துள்ளனர்.

தையிட்டிப் பகுதியில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழர் நிலங்களை மீட்டெடுப்பதற்கான எதிர்காலச் செயற்பாடுகள் குறித்த விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று

07

## இலங்கைக்கான ஆதரவு தொடரும்!

### ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் உறுதி



ஜெனிவா, ஏப். 16

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் ஊடாக இலங்கைக்கு தொடர்ச்சியான ஆதரவு வழங்கப்படும் என ஆணையாளர் வோல்கர் டர்க் ஐ.நாவுக்கான இலங்கையின் தூதுவரும் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியுமான சுமித் தஸநாயக்கவிடம் உறுதியளித்துள்ளார்.

07

## வாந்தி எடுத்த 8 வயதுச் சிறுமி நேற்று பரிதாமாக உயிரிழப்பு!

### யாழ்ப்பாணத்தில் துயரச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 16

வாந்தி எடுத்த சிறுமி ஒருவர் நேற்று பரிதாபமாக உயிரிழந்தார். யாழ்ப்பாணத்தை சேர்ந்த எட்டு வயதுடைய முகமது ஜிஹாட் பவிஹா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவருக்கு கடந்த 13ஆம் திகதி வயிற்றுவலியுடன் வாந்தி ஏற்பட்டது. இந்நிலையில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டது.

அதன் பின்னர் நேற்று அதிகாலை ஒரு

07

## அமெரிக்காவின் செய்தியுடன் ஈரான் சென்றது பாகிஸ்தான் உயர்மட்ட குழு!



தெஹ்ரான், ஏப். 16

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான பதற்றத்தைத் தணிக்கும் நோக்கில், பாகிஸ்தான் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் ஆசிம் முனீர் தலைமையிலான உயர்மட்டத் தூதுக்குழு ஈரான் சென்றுள்ளது.

அமெரிக்காவிடமிருந்து பெறப்பட்ட விசேட செய்தியை ஈரானிடம் கையளிக்கவும், இரு நாடுகளுக்கும் இடையிலான அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தைகளை ஒருங்கிணைக்கவும் இந்த குழு ஈரான் சென்றுள்ளதாக ஈரான் நாட்டு ஊடகமான ஐ.ஆர்.ஐ.பி. செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் ஈரானுக்கு இடையிலான இரண்டாம் கட்ட நேரடிப் பேச்சுவார்த்தைகளை எதிர்வரும் நாள்களில் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நடத்துவதற்கான

07

## 11 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம் சந்தேகநபர் பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ்ப்பாணத்தில் சிறுமி ஒருவரை தவறான நடத்தைக்கு உட்படுத்திய சந்தேகநபர் ஒருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மூளாய் - வேரம் பகுதியைச் சேர்ந்த 11 வயதுடைய குறித்த சிறுமியை அவரது வீட்டின் அருகே வசிக்கும் 38 வயதுடைய நபரே இவ்வாறு கடந்த சில தினங்களுக்கு முன்னர் தவறான நடத்தைக்கு உட்படுத்தியுள்ளார்.

07

## பெற்றோலுடன் கப்பல் வந்தடைந்தது!

கொழும்பு, ஏப். 16

எரிபொருள் கையிருப்பை வலுப்படுத்தும் நோக்கில், 36 ஆயிரத்து 700 மெற்றிக் தொன் “ஒக்ரேன் 92” ரக பெற்றோலை ஏற்றிய கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்துள்ளதாக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு எரிபொருள் விநியோகத்தில் தட்டுப்பாடு ஏற்படுவதை தவிர்க்கும் முகமாக, இந்தியாவில் இருந்து இந்த பெற்றோல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக எரிபொருள் விநியோகத்தைச் சீராகப் பேணுவதற்கு முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர் நடவடிக்கைக்கு அமைவாக,

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வடக்கில் அதிக சனத்தொகை கொண்ட கிராம அலுவலர் பிரிவுகள் வவுனியாவில்!

வவுனியா, ஏப். 16

வட மாகாணத்தில் உள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் சனத்தொகை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தரவு ஆய்வில் அதிக சனத்தொகை கொண்ட முதல் பத்து இடங்களில் ஒன்பது இடங்களை வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பிரிவுகளே பிடித்துள்ளன.

வெளியிடப்பட்டுள்ள தரவுகளின்படி, வவுனியா மாவட்டத்தின் தோணிக்கல் கிராம அலுவலர் பிரிவு 6,874 மக்களுடன் முதலிடத்தில் உள்ளது. அதனைத் தொடர்ந்து பட்டாணிச்சி புளியங்குளம் (6,580) மற்றும் மகாறம்பைக்குளம் (6,463) ஆகிய பிரிவுகள் அடுத்தடுத்த இடங்களைப் பெற்றுள்ளன.

முதல் 10 இடங்களில் 9 இடங்கள் வவுனியா மாவட்டத்திற்கே கிடைத்துள்ளன. இதில் வவுனியா மற்றும் வெண்கலச்செட்டிக்குளம் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகள் உள்ளடங்குகின்றன.

வவுனியா மாவட்டத்திற்கு வெளியே, கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புதிய புன்னைநீராவி கிராம அலுவலர் பிரிவு 6,144 மக்களுடன் பட்டியலில் 4ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

இந்தத் தரவுகளின் படி, வட மாகாணத்தின் அதிக சனத்தொகை அடர்த்தி கொண்ட கிராமங்களாக வவுனியா நகரத்தை சூழவுள்ள பகுதிகளே காணப்படுகின்றன.

குறிப்பாக, முதல் மூன்று இடங்களையும் வவுனியா பிரதேச செயலர் பிரிவே தன்வசம் வைத்துள்ளது. வவுனியா மாவட்டத்திற்கு வெளியே கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு பிரிவு மாத்திரமே இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (அ)

# நள்ளிரவில் புகுந்து பெண்ணின் வாழ்வாதாரத்தை அழித்த நபர்!

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஏப். 16

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் வசித்து வந்த பெண் ஒருவரின் வாழ்வாதாரத்தை அழிக்கும் நோக்கில், நள்ளிரவில் மர்ம நபர் பயன்தரு மரங்களைச் சேதப்படுத்தியுள்ளதுடன் திருட்டிலும் ஈடுபட்டுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வவுனியா - தாண்டிக்குளம், ஐயனார் கோவில் முன்பாக அமைந்துள்ள வீடொன்றில் வசித்த சகோதரர்கள் அனைவரும் தற்போது வெளிநாடுகளில் வசித்து வருகின்றனர். இவர்களது சகோதரி மற்றும் அவரின் கணவர் மாத்திரம் குறித்த வீட்டில் வசிக்கின்றனர்.

தனது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் வெளிநாட்டில் உள்ள தனது சகோதரர்களின் நிதியுதவியுடன், குறித்த பெண் தனது வீட்டுத் தோட்டத்தில் அண்மையில் 50 இற்கும் மேற்பட்ட வாழைக்கன்றுகளை நட்டுப் பராமரித்து வந்துள்ளார்.


நேற்று முன் தினம் அதிகாலை சுமார் 12.30 மணியளவில், தலைக்கவசம் அணிந்த நபர் ஒருவர் அத்துமீறி வீட்டுக்குள் நுழைந்துள்ளார்.

அவர் தோட்டத்தில் நடப்பட்டிருந்த அனைத்து வாழை மரங்களையும் வெட்டிச் சேதப்படுத்தியதுடன், அங்கிருந்த சில கட்டடப் பொருள்களையும் களவாடிச் சென்றுள்ளதாகப் பாதிக்கப்பட்ட வீட்டார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து குறித்த பெண்ணால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், மர்ம நபர் பயிர்ச்செய்கையைச் சேதப்படுத்தும் மற்றும் திருட்டில் ஈடுபடும் காட்சிகள் அங்குள்ள சிசிரிவி கமெராவிலும் பதிவாகியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)




# வவுனியாவில் இளைஞர் மீது பொலிஸார் கடும் தாக்குதல்!

## மனித உரிமை ஆணைக்குழு விசாரணை



வவுனியா, ஏப். 16

சித்திரைப் புத்தாண்டு தினமான நேற்று முன் தினம் இரவு வவுனியா மாநகரசபை மைதானத்தில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியின்போது, பொலிஸார் இளைஞர் ஒருவரை மனிதாபிமானமற்ற முறையில் தாக்கிய சம்பவம் அப்பகுதியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

வவுனியா மாநகரசபை மைதானத்தில் நேற்று முன் தினம் இரவு பெருமளவிலான மக்கள் பங்கேற்புடன் இசை நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது இசை நிகழ்ச்சியின் நுழைவாயில் பகுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்கும், அங்கு வந்த இளைஞர்களுக்கும் இடையே திடீரென வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

தர்க்கம் முற்றிய நிலையில், அங்கிருந்த பொலிஸார் ஓர் இளைஞனைத் தமது கால்களாலும் பாதுகாப்பு அங்கிகளாலும் தாக்கியுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான இளைஞனை பொலிஸார் பலவந்தமாகப் பொலிஸ் வாகனத்தில் ஏற்றிச் சென்றனர். எனினும், சிறிது நேரத்தின் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டிய பொலிஸார், மக்கள் முன்னிலையிலேயே ஒரு இளைஞன் மீது இவ்வாறான வன்முறையைப் பிரயோகித்தது அங்கிருந்தோரை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான காணொளிகள் சமூக வலைத்தளங்களில் பரவி வரும் நிலையில், பல்வேறு தரப்பினரும் தமது கண்டனங்களை வெளியிட்டு வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு தற்போது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (அ)

# வடக்கில் கடும் வெப்பம்!

கொழும்பு, ஏப். 16

சூரியனின் வடக்கு நோக்கிய நகர்வின் காரணமாக நேற்று மதியம் சுமார் 12.10 மணியளவில் பண்டத்தரிப்பு, தெல்லிப்பழை, வசாவிளான், வசாவிளான் மற்றும் மணற்காடு போன்ற இடங்களுக்கு மேலாக சூரியன் உச்சம் கொடுத்ததாக என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய, வடமேல், மேல் மற்றும் தென் மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் மொனராகலை மாவட்டங்களிலும் நேற்று அதிகரித்த வெப்பநிலை காணப்பட்டது என்றும் கூறப்பட்டுள்ளது.

மத்திய, சப்ரகமுவ, மேல், வடமேல் மற்றும் தென் மாகாணங்களின் பல இடங்களிலும் அத்துடன் அனுராதபுரம் மாவட்டத்தின் பல இடங்களிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்

சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் 50 மில்லிமீற்றர் வரையிலான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# பாதசாரி கடவையில் வீதியைக் கடக்க முயன்றவர் வாகனம் மோதி உயிரிழப்பு!

## கிளிநொச்சியில் துயரச் சம்பவம்

கிளிநொச்சி, ஏப். 16

கிளிநொச்சி ஏ - 9 பிரதான வீதியில், நேற்று முன் தினம் பாதசாரி கடவையில் வீதியைக் கடக்க முயன்ற நபர் ஒருவர் வான் மோதி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி அதிவேகமாகச் சென்ற வான் ஒன்றே, பாதசாரி கடவையூடாக வீதியைக் கடக்க முயன்ற நபர் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் சிக்கிய 44 வயதுடைய நபர் பலத்த காயமடைந்துள்ளார்.

அவரை அங்கிருந்தவர்கள் மீட்டு உடனடியாக கிளிநொச்சி போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர். எனினும், அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்துடன் தொடர்புடைய வானின் சாரதியைக் கிளிநொச்சி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார், சாரதியின் கவனக்குறைவு அல்லது அதிவேகமே விபத்துக்குக் காரணமா என்பது குறித்து ஆராய்ந்து வருகின்றனர். (அ)

# இலங்கையின் கல்வி நிலையில் பெண்கள் ஆதிக்கம் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 16

இலங்கையில் பாடசாலை கல்வி மற்றும் உயர் கல்வியில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்து காணப்படுவதுடன், குறைந்த கல்வியறிவு கொண்ட மாவட்டங்களில் நுவரெலியாவும் உள்ளடங்கியுள்ளதாக தொகைமதிப்பு மற்றம் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் மக்கள்தொகை மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்புத் தரவுகளின் அடிப்படையில், நாட்டின் கல்வி நிலை குறித்த தகவல்களிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இலங்கையில் 5 முதல் 24 வயதுக்குட்பட்ட மொத்த மக்கள்தொகையான 6,695,363 நபர்களில் 4,351,225 பேர் (65.0 வீதம்) பாடசாலைக் கல்வியில் ஈடுபட்டுள்ளனர். இதில் பாலின ரீதியாகப் பார்க்கும்போது, பெண்களின் பங்களிப்பு (65.9 வீதம்) ஆண்களை விட (64.1 வீதம்) சற்று அதிகமாகக் காணப் படுகிறது.

2012 ஆம் ஆண்டில் 4.7 வீதமாக இருந்த கல்வி அறிவு அற்றவர்களின் விகிதம், 2024 இல் 2.9 வீதமாகக் குறைந்துள்ளது. இதில் பெண்களிடையே 3.6 வீதமாகவும் ஆண்களிடையே 2.1 வீதமாகவும் உள்ளது.

நாட்டின் பெரும்பான்மையான மக்கள் (58.4 வீதம்) இரண்டாம் நிலைக் கல்வியைப் பெற்றுள்ளனர். இதில் க.பொ.த. சாதாரணத் தர தகைமை பெற்றவர்களின் விகிதம் 2012 இல் 19.1 வீதத்தில் இருந்து, 2024 இல் 22.0 வீதமாக உயர்ந்துள்ளது.

மூன்றாம் நிலை மற்றும் உயர் கல்வி பிரிவில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. 2012 இல் 18.2 வீதமாக இருந்த மூன்றாம் நிலைக் கல்வித் தகைமை, 2024 இல் 26.2 வீதமாக அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணம் (0.7 வீதம்) மற்றும் கொழும்பு (1.6 வீதம்) ஆகிய மாவட்டங்கள் மிகக் குறைந்த அளவிலான "கல்வி பெறாதவர்களைக" கொண்ட மாவட்டங்களாக உள்ளன. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
16.04.2026 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 03

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## அவசரகாலநிலை நீடிப்பு தொடர்பிலான விமர்சனங்கள்

கடந்த நவம்பரில் "டித்வா" சூறாவளி ஏற்படுத்திய உயிரிழப்புகள், அழிவுகளையடுத்து தோன்றிய நெருக்கடி நிலையைக் கையாள அவசரகால நிலையை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பிரகடனம் செய்தது.

அவசரகால நிலையை நீடிப்பதானால் பொதுப் பாதுகாப்பு ஒழுங்கு விதிகளின் கீழ் மாதாந்தம் பாராளுமன்றத்தில் பிரேரணையை சமர்ப்பித்து அரசாங்கம் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். இறுதியாக அந்த அங்கீகாரத்தை கடந்த வியாழக்கிழமை (9/4) பாராளுமன்றம் வழங்கியது.

சூறாவளிக்குப் பிறகு ஐந்து மாதங்கள் கடந்து விட்டபோதிலும், அரசாங்கம் அவசரகால நிலையை நீடித்து வருவதை எதிரணிக் கட்சிகள் கடுமையாகக் கண்டனம் செய்கின்றன. சூறாவளியின்போது அவசரகால நிலையை பிரகடனம் செய்வதற்கு அரசாங்கம் தாமதம் செய்ததாக விமர்சனம் செய்த அந்த கட்சிகள் தற்போது ஐந்து மாதங்கள் கடந்த நிலையில் அதை நீடிப்பதற்காக கண்டனம் செய்கின்றன.

முதலில் சூறாவளியின் பாதிப்புக்களைக் கையாளுவதற்கு அவசரகால நிலையை பிரகடனம் செய்த அரசாங்கம் தற்போது மத்திய கிழக்குப் போரின் விளைவாக தோன்றியிருக்கும் பொருளாதார நெருக்கடியை கையாளுவதற்கு அவசரகால நிலையை நீடிக்க வேண்டியது அவசியம் என்று கருதுவதாக இருக்கலாம்.

அவசரகால நிலை நடைமுறையில் இருப்பதால் குடிமைச் (சிவில்) சுதந்திரங்களும் ஜனநாயக உரிமைகளுக்கும் தற்போது பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக எதிரணிக் கட்சிகள் முன்வைக்கின்ற குற்றச்சாட்டுக்களின் தகுதி குறித்தும் விமர்சனங்கள் உண்டு. அதேவேளை, சுதந்திர இலங்கை அதன் பெரும்பாலான வருடங்களை அவசரகால நிலையின் கீழ் செலவிட்டதற்கு பொறுப்பாக இருந்த ஐக்கிய தேசிய கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் கூட வெறுமனே ஒரு ஐந்து மாதங்களே அவசரகால நிலையை நடைமுறையில் வைத்திருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைக் கண்டனம் செய்யும் விசித்திரத்தையும் காண்கிறோம்.

எது எவ்வாறிருந்தாலும், நீண்டகாலத்துக்கு அவசரகால நிலையை நடைமுறையில் வைத்திருப்பது அதுவும் குறிப்பாக, அரசியல் காரணங்களுக்காக அதை நீடிப்பது ஜனநாயக நிறுவனங்களையும் குடிமைச் சுதந்திரங்களையும் மலினப்படுத்தும் என்பதுடன் ஆட்சிமுறை மீதான மக்களின் நம்பிக்கையையும் பாதிக்கும்.

நீண்டகாலமாக அவசரகால நிலை நடைமுறையில் இருந்ததன் விளைவாக அதிகார துஷ்பிரயோகம், ஊழல் முறைகேடுகள், அரசு நிருவாகத்தின் வெளிப்படைத்தன்மை இன்மை, ஆட்சிமுறையில் எதேச்சாதிகாரப் போக்கு, ஊடக மற்றும் கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரங்களுக்கு பாதிப்பு என்று பல தீங்குகளை. மக்கள் கடந்த காலந்தில் அனுபவித்தார்கள். அவற்றை மக்கள் மறந்துவிடவில்லை.

இலங்கையில் பெரும்பாலும் அவசரகால நிலை தேவை கருதிப் பயன்படுத்தப்பட்டது என்பதை விடவும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வந்திருக்கிறது என்ற வரலாற்றுப் பாடத்தை தேசிய மக்கள் சக்தி கருத்தில் எடுத்துச் செயற்பட வேண்டும் என்று ஈழநாடு வலியுறுத்துகிறது.

## அமெரிக்கா-ஈரான் அமைதி பேச்சுவார்த்தை; பாக். பிரதமரின் மத்தியஸ்த முயற்சி தீவிரம்!

இஸ்லாமாபாத், ஏப். 16

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே நிலவும் போர் பதற்றத்தைத் தணித்து, அமைதியை நிலைநாட்டும் நோக்கில் பாகிஸ்தான் முன்னெடுத்து வரும் இராஜதந்திர முயற்சிகள் தற்போது அடுத்த கட்டத்தை எட்டியுள்ளன.

பிரதமர் ஷேபாஸ் ஷெரீப் இந்த வாரம் சவுதி அரேபியா மற்றும் துருக்கிக்குச் சென்று, அங்குள்ள தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் மேற்கொண்டு வரும் இந்த அமைதி முயற்சிகள் குறித்து ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரிக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. தற்போதைய இரண்டு வார கால போர்நிறுத்தத்தைப் பயன்படுத்தி, நிரந்தரத் தீர்வொன்றைப் பெற அமெரிக்கா மற்றும் ஈரானுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

புதிய பேச்சுவார்த்தைகள் எங்கு நடைபெறும் என்பது குறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்றாலும், பாகிஸ்தான் அல்லது சுவிற்சர்லாந்தின் ஜெனிவா ஆகிய நகரங்கள் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

நியூயோர்க் போஸ்ட் இதழுக்கு வழங்கிய நேர்காணலில், அடுத்த இரண்டு நாட்களில் பாகிஸ்தானில் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்கலாம் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஆசிம் முனிரின் செயல்பாடுகளையும் அவர் பாராட்டியுள்ளார்.

போர்நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்குவதற்கு அதிக வாய்ப்புள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ் மற்றும் ஈரானிய பாராளுமன்ற சபாநாயகர் முகமது பாகர் காலிபாப் ஆகியோருக்கு இடையே நடைபெற்ற 21 மணிநேரப் பேச்சுவார்த்தை எவ்வித முடிவும் இன்றி நிறைவடைந்திருந்தது.

(அ)

## அமெ. முற்றுகையால் ட்ரம்பிற்குப் நெருக்கடி; ஹோர்முஸ் விவகாரத்தில் ஐரோப்பா தனிவழி!

நியூயோர்க், ஏப். 16

ஈரான் மீதான அமெரிக்காவின் கடற்படை முற்றுகையினால், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முன்னெப்போதும் இல்லாத வகையில் நெருக்கடிகளைச் சந்தித்து வருவதாக இராஜதந்திர ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போதைய நடவடிக்கை காரணமாக, டரம்ப் எந்தவொரு மாபெரும் வெற்றியையும் பெறவில்லை என, அமெரிக்கப் பாதுகாப்புத் துறையின் முன்னாள் துணை உதவிச் செயலாளர் டேவிட் செட்னி குறிப்பிட்டுள்ளார்.

இந்த முற்றுகையின் மூலம் தன் மீதான அழுத்தத்தை அவரே அதிகரித்துக் கொண்டுள்ளதாக செட்னி குற்றம் சுமத்தியுள்ளார்.

ஹோர்முஸ் நீரிணை முடக்கப்பட்டுள்ளதால் அமெரிக்காவை விட சீனா, இந்தியா மற்றும் தென்கொரியா போன்ற நாடுகளே பெரும் பாதிப்புகளைச் சந்தித்து வருகின்றன.

இந்த நாடுகள் தங்களின் எரிசக்தித் தேவைகளுக்காகச் சர்வதேச அளவில் அமெரிக்காவுக்கு அழுத்தங்களைக் கொடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ட்ரம்ப்பின் ஆதரவாளர்கள் ஈரானுக்கு எதிரான நேரடி இராணுவ நடவடிக்கைகளை விரும்புவதில்லை என்றும் டேவிட் செட்னி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில், ஈரான் மீதான "அதிகபட்ச அழுத்தம்" கொடுக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, ஈரானிய மசகு எண்ணெய் விற்பனைக்கு வழங்கப்பட்டிருந்த தற்காலிகத் தளர்வுகளை நீடிக்கப்போவதில்லை என்று அமெரிக்கத் திறைசேரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, அமெரிக்காவின் பங்களிப்பு இன்றி ஹோர்முஸ் நீரிணையில் தடையற்ற கப்பல் போக்குவரத்தை மீண்டும் உறுதி செய்வதற்கான போருக்குப் பிந்திய திட்டமொன்றை ஐரோப்பிய நாடுகள் தயாரித்து வருவதாகத் வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி, சர்வதேச வர்த்தகக் கப்பல்கள் பாதுகாப்பாகச் செல்வதை உறுதி செய்ய ஐரோப்பிய நாடுகள் ஒரு பரந்த கூட்டணியை உருவாக்கத் திட்டமிட்டுள்ளன.

இந்தக் கூட்டணியில் பல்வேறு நாடுகள் இடம் பெற்றாலும், அமெரிக்காவைத் தவிர்த்து இந்தத் திட்டத்தை முன்னெடுக்க ஐரோப்பா ஆலோசித்து வருகிறது.

(அ)

## விநியோகத் தடைக்கு மத்தியில் எண்ணெய் விலையில் வீழ்ச்சி!

நியூயோர்க், ஏப். 16

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாகலாம் என்ற எதிர்பார்ப்புக்கு மத்தியில், உலக சந்தையில் மசகு எண்ணெய் விலைகள் தொடர்ந்து இரண்டாவது நாளாகவும் நேற்றும் வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

மத்திய கிழக்கின் பதற்றமான சூழல் மற்றும் ஹோர்முஸ் நீரிணைப்பு மூடப்பட்டமையால் தடைப்பட்டிருந்த எண்ணெய் விநியோகம், இந்தப் பேச்சுவார்த்தைகள் மூலம் சீராகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரெண்ட் மசகு எண்ணெய் 0.55 வீதம் குறைந்து ஒரு பீப்பாய் 94.27 டொலராக பதிவாகியுள்ளது.

அத்துடன், டபிள்யூ.டி.ஐ. மசகு எண்ணெய் 1.04 டொலர்கள் (1.1 வீதம்) குறைந்து ஒரு பீப்பாய 90.24 டொலராக வீழ்ச்சியடைந்துள்ளது.

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் அடுத்த இரண்டு நாள்களில் மீண்டும் ஆரம்பமாக வாய்ப்புள்ளதாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கடந்த வார இறுதியில் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, ஈரானிய துறைமுகங்கள் மீது அமெரிக்கா தடை விதித்திருந்தது.

இதனால் எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டிருந்தது.

உலக நாடுகளுக்கான முக்கிய கடல் வழிப்பாதையான ஹோர்முஸ் நீரிணைப்பு ஊடான போக்குவரத்து, போர் காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இரண்டு வார போர் நிறுத்தம் அமுலில் இருந்தபோதிலும், வழமையான கப்பல் போக்குவரத்தில் ஒரு சிறு பகுதி மாத்திரமே தற்போது நடைபெறுகிறது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு



ஏப்ரல் - 16 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - சித்திரை 03
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : சதுர்த்தசி




**மேடம்**
குடும்பத்தினரை அனுசரித்து போங்கள். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் மோதல்கள் வரக்கூடும். நன்மை நடக்கும் நாள்.

**இடபம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் புதுத்தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். சிறப்பான நாள்.

**மிதுனம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர் நண்பர்களால் ஆதாயமுண்டு. வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**கடகம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எதிலும் இதைப் போல் ஒருவித கவலைகள் வந்து செல்லும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும் நாள்.

**கன்னி**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. தாயார் ஆதரித்துப் பேசுவார். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். மகிழ்ச்சியான நாள்.

**துலாம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டுப் பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தொட்டது துலங்கும் நாள்.

**விருட்சிகம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.


**தனுசு**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். தடைகளை தாண்டி வெல்லும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வீடு மனை வாங்குவது விற்பது லாபகரமாக அமையும். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்து கொள்வீர்கள்.தைரியம் கூடும்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டுப் பேசுவீர்கள். புது முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் தள்ளி ஒப்பந்தம் கையெழுத்தாகும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்று அவ்வப்போது ஆதங்கப்படுவீர்கள். முன்கோபத்தை தவிர்க்க வேண்டும்.

# ஜனாதிபதி அநுரவின் பங்கேற்புடன் எண்ணெய் தேய்க்கும் அரச விழா



கொழும்பு, ஏப். 16

புத்தாண்டின் பாரம்பரியங்களுக்கு அமைவாக 2026 எண்ணெய் தேய்க்கும் அரச விழா, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் பங்கேற்புடன் கண்டி வரலாற்று சிறப்புமிக்க தலதா மாளிகை, மகா நாத தேவாலய வளாகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

மகா விகாரவங்சிக சியாமோபாலி மகா பீடத்தின் மல்வத்து மற்றும் அஸ்கிரி ஆகிய இரு பிரிவுகளின் மகா நாயக்க தேரர்களின் வழிகாட்டலுடன் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு மற்றும் ஆயுர்வேத திணைக்களம் என்பன இணைந்து சம்பிரதாய முறைப்படி இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

நேற்றுக் காலை வரலாற்று தலதா மாளிகைக்குச் சென்று மத வழிபாடுகளில் ஈடுபட்ட ஜனாதிபதி , பிறந்துள்ள சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டுக்காக ஆசீர்வாதம் பெற்ற பின்னர், 2026 எண்ணெய் தேய்க்கும் அரச விழாவில் கலந்துகொண்டார்.

மத வழிபாடுகளைத் தொடர்ந்து, நேற்று காலை 6.55 மணிக்கு சுப நேரத்தில் அஸ்கிரி பிரிவின் மகா நாயக்க தேரர் அதிவணக்கத்திற்குரிய வரகாகொட ஞானரதன தேரர், ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினருக்கு முறைப்படி எண்ணெய் தேய்க்கும் சம்பிரதாயத்தினை முன்னெடுத்தார். இதன்போது மகா சங்கத்தினர் செத் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதி உள்ளிட்ட நாட்டு மக்களுக்கு ஆசீர்வாதம் வழங்கினர்.

இதேவேளை, எண்ணெய் தேய்க்கும் சம்பிரதாயத்திற்காக தலதா மாளிகை வளாகத்திற்கு வருகை தந்திருந்த மக்களிடையே சென்ற ஜனாதிபதி, அவர்களின் நலன்களைக் கேட்டறிந்து சுமூகமான கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன்போது அங்கிருந்த மக்கள் பிறந்துள்ள புத்தாண்டுக்காக ஜனாதிபதிக்குத் தமது வாழ்த்துகளைத் தெரிவித்தனர். (அ)

# 240 ஈரான் மாலுமிகள் நாட்டுக்கு திரும்பினர்

கொழும்பு, ஏப். 16

இலங்கையின் பாதுகாப்பில் இருந்த ஈரான் கடற்படையைச் சேர்ந்த 240 மாலுமிகள் நேற்று முன் தினம் ஈரான் நாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்பரப்புக்கு அருகில் அமெரிக்கத் தாக்குதலுக்குள்ளான ஈரானின் ஐ.ஆர். ஐ.எஸ் டெனா, கப்பலில் இருந்து மீட்கப்பட்ட 32 மாலுமிகளும், ஈரான் கடற்படைக்குச் சொந்தமான ஐ.ஆர்.ஐ.எஸ் பஜேஸ்க்ர் கப்பலில் இருந்த 204 மாலுமிகளுமே இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுவினர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து துருக்கிக்கான விசேட விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## வெவ்வேறு பகுதிகளில் இரண்டு கொலைகள்!

கொழும்பு, ஏப். 16

நாட்டில் வெவ்வெறு பகுதிகளில் இரு கொலைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அதன்படி வெள்ளவாய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெட்டொலகம பகுதியில் பெண் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

பெண்ணின் நிலை தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் பெண்ணை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தபோதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த பெண்ணுக்கும் அவரது காதலனுக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்னையே கொலைக்கு காரணம் என ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

தலைமறைவாகியுள்ள சந்தேக நபரை கைது செய்ய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவேளை, பயாகல விகாரந்த பகுதியில் உள்ள வீடொன்றில் நபர் ஒருவர் தடியால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

மதுபான விருந்தின்போது ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதையடுத்தே இக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (அ)

# பட்டாசு விபத்துக்கள் குறைவு

கொழும்பு, ஏப். 16

நாட்டில் கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது, இந்த புத்தாண்டு காலத்தில் பட்டாசு விபத்துகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் புத்தாண்டு மற்றும் பண்டிகைக் காலங்களில் அதிகளவான, வீதி விபத்துகள் மற்றும் பட்டாசுகளால் ஏற்படும் விபத்துகள் பதிவாகும் என சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

பொதுவாக ஒரு வருடம் முழுவதும் வாராந்தம் சுமார் 25 ஆயிரம் பேர் பல்வேறு விபத்துகள் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதாக சுகாதார அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எவ்வாறாயினும், கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது, பட்டாசு விபத்துகளின் எண்ணிக்கை தற்போது படிப்படியாகக் குறைந்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# காணாமல்போன யூரியூபர் மீட்பு

கொழும்பு, ஏப். 16

ஹந்தானை மலைப்பகுதியில் வீடியோ எடுக்கச் சென்று காணாமல்போன யூரியூபர் ஒருவரை இராணுவத்தினர் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

ஹந்தானை மலைத்தொடரின் ஓணான் முதுகு அல்லது “கட்டுஸா கொண்ட” என்றழைக்கப்படும் பகுதியில் குறித்த நபர் ஏறிச் சென்றபோது வழிதவறி காணாமல் போயிருந்தார். அதனையடுத்து, அவரை இராணுவத்தினர் மீட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்டவரை மீட்பதற்காக விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டே அவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

இவர் முன்னதாக ஹந்தானை பகுதியில் வசித்தவர் என்றும், பின்னர் கொழும்பில் குடியேறியவர் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஒரு யூரியூப் செயற்பாட்டாளரான இவர், மலை ஏறி அரிய காட்சிகளைப் படம் பிடிப்பதில் ஆர்வம் கொண்டவர் என தெரிவிக்கப்படுகிறது. (அ)

# புத்தாண்டில் மகாவலி கங்கையில் நீராடிய சகோதரர்கள் மூவர் மாயம்!

கொழும்பு, ஏப். 16

மகாவலி கங்கையில் நீராடச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரர்கள் நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளனர்.

புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இவ்வாறு நீரில் மூழ்கியவர்கள் மஹிந்தபுர பகுதியைச் சேர்ந்த 24, 34 மற்றும் 35 வயதுடைய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரர்களாவர்.

காணாமல் போனவர்களை தேடும் பணியில் கடற்படை உயிர்காப்புப் பிரிவினரும் சேருநுவர பொலிஸ் அதிகாரிகளும் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# "கற்றுக்கொள்ளத் தயாரென்றால் உங்களுக்கு கற்றுத் தருகிறோம்"

## 119 சேவை குறித்து ஹர்ஷ டி சில்வா விமர்சனம்

கொழும்பு, ஏப். 16

இலங்கை பொலிஸாரின் அவசர அழைப்பு முறைமையின் தோல்விகளைச் சுட்டிக்காட்டியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, அதனை "சுவசெரிய" 1990 இலவச நோயாளர் காவு வண்டி சேவையுடன் ஒப்பிட்டு விமர்சித்துள்ளார்.

"நீங்கள் கற்றுக்கொள்ளும் அளவிற்குப் பணிவாக இருந்தால், அதை எப்படிச் செய்வது என்று நாங்கள் உங்களுக்குக் கற்றுத் தருவோம்" என்றும் அவர் பொலிஸ் தரப்பிற்குச் சவால் விடுத்துள்ளார்.

ஹர்ஷ டி சில்வா தனது எக்ஸ் தளப் பதிவில் பின்வரும் முக்கிய புள்ளிவிவரங்களை முன்வைத்துள்ளார்.

பொலிஸார் நாளொன்றுக்கு 4,500 அழைப்புகளைக் கையாளுவதாகக் கூறும் நிலையில், சுவசெரிய கடந்த ஏழு ஆண்டுகளாக நாளொன்றுக்குச் சராசரியாக 5,000 அழைப்புகளைக் கையாண்டு வருகின்றது.



சுவசெரிய சேவையில் 98.9 சதவீதமான அழைப்புகள் முதலாவது ஒலியிலேயே பதிலளிக்கப்படுகின்றன.

சுவசெரியவின் நாடு தழுவிய சராசரி பதில் வழங்கும் நேரம் வெறும் 13 நிமிடங்கள் மட்டுமே. ஆனால், பொலிஸாரின் பதிலளிப்பு 180 நிமிடங்கள் (3 மணி நேரம்) வரை தாமதமாவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

டிஜிற்றல் மயமாக்கப்பட்ட கட்டமைப்பு, கடுமையான நெறிமுறைகள் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக ஊழியர்களின் அர்ப்பணிப்புள்ள மனப்பாங்கு ஆகியவையே சுவ செரியவின் வெற்றிக்குக் காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, 119 அவசர அழைப்புகளுக்குப் பதிலளிப்பதில் ஏற்படும் தாமதங்கள் குறித்துத் தனக்குத் தினசரி முறைப்பாடுகள் கிடைப்பதாக அண்மையில் ஒப்புக்கொண்டிருந்தார்.

119-க்கு அழைத்து 3 மணி நேரமாகியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற முறைப்பாட்டையடுத்து, தாம் தனிப்பட்ட முறையில் 118 தேசிய உதவி மையத்தைத் தொடர்பு கொண்டு விசாரித்ததாகவும் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

பொதுமக்களின் அதிருப்தியை ஏற்றுக்கொண்ட அமைச்சர், இத்தகைய தாமதங்கள் குறித்து உத்தியோகபூர்வமாகப் புகாரளிக்குமாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 75 இலட்சம் ரூபா பெறுமதி கொண்ட போதைப்பொருளுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 16

வென்னப்புவ, தும்மலதெனிய பகுதியில் வைத்து டுபாயில் தலைமறைவாக இருக்கும் திட்டமிட்ட குற்றக் குழுத் தலைவர்களின் போதைப்பொருள் வியாபரத்தை மேற்கொண்ட சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் ஹைடொப் துஷார என்பவரின் போதைப் பொருள் விநியோக முக்கிய உதவியாளர் என முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

வென்னப்புவ - தும்மலதெனிய பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போது சந்தேக நபரிடமிருந்து 75 இலட்சம் ரூபா பெறுமதியான 120 கிராம் 580 மில்லிகிராம் ஹெரோயின், 53 கிராம் 610 மில்லிகிராம் ஐஸ் என்பன மீட்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கையரை தாக்கியதாகக் கூறப்படும் வெளிநாட்டு பெண்ணுக்கு விளக்கமறியல்!

கொழும்பு, ஏப். 16

கல்கிஸையில் அமைந்துள்ள உணவகம் ஒன்றுக்கு முன்பாக கடந்த 12ஆம் திகதி இரவு இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட உக்ரைன் நாட்டுப் பெண் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை பெண் ஒருவரைத் தாக்கியதுடன், கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டதாகவும், சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸ் அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்ததாகவும் குறித்த உக்ரைன் நாட்டுப் பெண் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று இரவு கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த அதிகாரிகளால் இவர் உடனடியாகக் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், கல்கிஸை நீதவான் முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டதையடுத்து, எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

விசாரணையில், இந்தப் பெண் கடந்த 12 வருடங்களாக இலங்கையில் வசித்து வருபவர் என்பது கண்டறியப்பட்டுள்ளது. (அ)

# நேற்று முதல் விசேட போக்குவரத்து

கொழும்பு, ஏப்.16

தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டு விடுமுறையை முன்னிட்டு தமது சொந்த ஊர்களுக்குச் சென்ற மக்கள் மீண்டும் கொழும்பு திரும்புவதற்காக விசேட போக்குவரத்து சேவைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பயணிகளின் வசதி கருதி நேற்று முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை மேலதிக பஸ் சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிராண்டா தெரிவித்துள்ளார்.

குறிப்பாக பதுளை, பண்டாரவளை, நுவரெலியா, கண்டி மற்றும் தென் மாகாணங்களில் இருந்து கொழும்புக்கான போக்குவரத்து சேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கிராமப்புறங்களில் இருந்து கொழும்பு நோக்கி மக்களை ஏற்றிச் செல்வதற்காக இலங்கை போக்குவரத்துச் சபையினால் 1,500 மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக சபையின் தலைவர் சஜீவ நந்தன கனகரத்ன உறுதிப்படுத்தியுள்ளார்.

பஸ் சேவைகளுக்கு மேலதிகமாக, ரயில் திணைக்களமும் விசேட ரயில் சேவைகளை நேற்று முதல் ஆரம்பித்துள்ளது.

இந்த விசேட சேவைகள் எதிர்வரும் 19-ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, அனுராதபுரம் - கொழும்பு கோட்டை, காங்கேசன்துறை - அனுராதபுரம், மாத்தறை - மருதானை மற்றும் பெலியத்த - மருதானை ஆகிய இடங்களுக்கு இடையில் இந்த விசேட ரயில்கள் இயக்கப்படவுள்ளன.

# சுற்றுலாத்துறையில் வீழ்ச்சி

கொழும்பு, ஏப். 16

இலங்கையின் சுற்றுலாத்துறையில் கடந்த சில மாதங்களாகக் காணப்பட்ட வளர்ச்சி மார்ச் மாதத்தில் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

கடந்த 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை சுமார் 50,000 பேரால் குறைவடைந்துள்ளதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய, கடந்த ஆண்டு மார்ச் மாதம் 2 இலட்சத்து 29 ஆயிரத்திற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்த போதிலும், இந்த ஆண்டு அந்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 83 ஆயிரத்து 979 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்தமையால் அந்தத் துறையிலிருந்தான வருமானமும் 4.9 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் சுற்றுலாத்துறை மூலம் 367.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமாகக் கிடைத்த நிலையில், இவ்வருடம் அது 352 மில்லியன் டொலர்களாகக் குறைந்துள்ளது.

இருப்பினும், வெளிநாட்டுத் தொழிலாளர்களின் பணப்பரிமாற்றம் தொடர்ந்து அதிகரிப்புப் பாதையில் செல்வது நாட்டின் பொருளாதாரத்திற்குச் சற்று நிம்மதியை அளித்துள்ளது.

மார்ச் மாதத்தில் மட்டும் தொழிலாளர் பணப்பரிமாற்றம் 814.8 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பகலில் கடுமையான வெப்பம் மாலையில் இடியுடன் கனமழை

## அதிகாலையில் பனிமூட்டம்

நுவரெலியா, ஏப். 16

மத்திய மலைநாட்டில் கடந்த சில நாட்களாக காலை வேளையில் அதிக அளவில் பனிமூட்டமும் மாலையில் கனமழையும் பெய்து வருகின்றது.

குறிப்பாக நுவரெலியா மற்றும் ஏனைய பிரதேசங்களில் அதிகளவில் பனிமூட்டம் நிலவியுள்ளது.

மத்திய மலைநாட்டில் பகல் வேளையில் அதிக உஷ்ணம் நிலவிவரும் வேளையில் மாலை நேரத்தில் இடி மின்னலுடன் கூடிய கன மழை பெய்து வருகிறது. அத்துடன் அதிகாலை வேளையில் கடும் பனி மூட்டம் நிலவுகிறது.

வெப்பம் உச்சக் கட்டத்தில் உள்ளதால் பல பாதிப்புக்களை மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் வெப்பத்தைத் தணிக்கும் விதமாக மாலையில் மழையும் காலையில் பனிமூட்டமும் நிலவுவதால் மக்கள் ஓரளவு வெளியில் நடமாட முடிகின்றது.

அதிகளவு பனிமூட்டம் நிலவுவதால் வாகனங்களை மிகவும் அவதானமாக செலுத்துமாறு ஹற்றன் வலய பொலிஸ் தலைமை அதிகாரி பிரதீப் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புத்தாண்டு காலத்தில் மத்திய மலை நாட்டிற்கு வருகை தந்த வாகனங்கள் மீண்டும் தலைநகர் கொழும்பு மற்றும் ஏனைய பகுதிகளுக்கு செல்லும் போது மிக மிக அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# மூன்று பிள்ளைகளின் தந்தை கொடூரமாக வெட்டிக்கொலை!

## காணித் தகராறால் விபரீதம்

கொழும்பு, ஏப். 16

குருநாகல், வாரியப்பொலைப் பிரதேசத்தில் இடம்பெற்ற காணி விவகாரம் காரணமாக, குடும்பஸ்தர் ஒருவர் கொடூரமான முறையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வாரியப்பொலை பிரதேசத்தில் நீண்டகாலமாக நிலவி வந்த காணித் தகராறு நேற்று முன்தினம் வன்முறையாக மாறியுள்ளது.

இதன்போது ஏற்பட்ட மோதலில், அதே பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய நபர் ஒருவர் கூரிய ஆயுதங்களால் வெட்டப்பட்டு உயிரிழந்துள்ளார்.

கொலை செய்யப்பட்ட நபர் மூன்று பிள்ளைகளின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக உயிரிழந்தவரின் நெருங்கிய உறவினரான 28 வயதுடைய இளைஞர் ஒருவரைப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

நீண்ட காலப் பகையே இந்தக் கொலைக்குக் காரணம் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

# களுவாஞ்சிக்குடி இறைச்சிக் கடையில் ஏற்கனவே இறந்த கோழிகள் விற்பனை

## உரிய வியாபாரிக்கு எதிராக சட்ட நடவடிக்கை

மட்டக்களப்பு, ஏப். 16

களுவாஞ்சிக்குடி பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்கு உட்பட்ட கோழி இறைச்சி கடையொன்றில் 57.5 கிலோ கிராம் ஏற்கனவே இறந்த கோழிகளின் இறைச்சியை குளிர்சாதன பெட்டியில் விற்பனைக்காக வைத்திருந்தமை சித்திரை வருடப்பிறப்பான செவ்வாய்க்கிழமை பொதுச் சுகாதார பரிசோதகரால் கண்டுபிடிக்கப்பட்டதுடன், உரிய வியாபாரிக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

சித்திரை புத்தாண்டு தினத்தை முன்னிட்டு களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட இறைச்சிக் கடைகள் அனைத்தும் பொது சுகாதார பரிசோதகர் குழுவினரினால் விசேட உணவு பாதுகாப்பு நடவடிக்கையின் பிரகாரம் திடீர் பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த குறித்த திடீர் பரிசோதனை நடவடிக்கையின் போது கோழி இறைச்சி கடையொன்றினுள் 57.5 கிலோ கிராம் ஏற்கனவே இறந்த கோழிகளின் இறைச்சியை குளிர்சாதனப் பெட்டியில் விற்பனைக்காக வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து இவ்வாறாக பாவனைக்கு உதவாத ஏற்கனவே இறந்த கோழி இறைச்சியை குளிர்சாதனப் பெட்டியில் விற்பனைக்காக களஞ்சியப்படுத்தி வைத்திருந்த நபருக்கு எதிராக களுவாஞ்சிகுடி பிரிவுக்கு பொறுப்பான பொது சுகாதார பரிசோதகர் த.சுஜானனினால் விற்பனையாளருக்கு கடும் எச்சரிக்கை வழங்கப்பட்டதுடன் விற்பனையாளருக்கு எதிராக வழக்கு தாக்கலும் செய்யப்பட்டது. (அ)

# கோமாரி பாலத்தில் சோலர் மின்குமிழ்கள்!



காரைதீவு, ஏப். 16

அக்கரைப்பற்று - பொத்துவில் பிரதான வீதியில் உள்ள கோமாரி பாலத்தடியில் முதன் முதலாக இரண்டு சூரிய மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

பொத்துவில் பிரதேச சபையின் இலங்கை தமிழ் அரசுக் கட்சி கோமாரி உறுப்பினர் த. சுபோதரன் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக, பொத்துவில் பிரதேச சபைத் தவிசாளர் எம்.எஸ்.எம்.முசாரப் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்.

முதலைகள் பரவலாக உலாவும் இந்த கோமாரிப் பாலத்தடியில் இதுவரை காலமும் மின் விளக்குகள் இல்லாமல் இருட்டாக இருந்தது.

தற்போது இரவு வேளைகளில் இப்பாலத்தடி பகல் போல பிரகாசிக்கின்றது. (அ)

# பஸ்-ஓட்டோ மோதி விபத்து!

கொழும்பு, ஏப். 16

கொட்டகலை கொமர்சல் பகுதியில் பஸ்ஸூம் ஓட்டோவும் மோதி விபத்து இடம் பெற்றுள்ளது.

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை கொமர்சல் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கும் ஆசிரியர் பயிற்சி கலாசாலைக்கும் இடையில் நேற்று முன் தினம் மாலை சுமார் 2.50 மணியளவில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

தனியார் பஸ் ஒன்றும் ஓட்டோ ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் ஓட்டோச் சாரதி கடுமையாக காயமடைந்துடன் ஓட்டோவில் சென்ற மேலும் ஒருவர் காயமடைந்தனர்.

இவ்வாறு காயமடைந்த இருவரும் கொட்டகலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டார். (அ)

# மல்வத்து மகாநாயக்க தேரரை சந்தித்து ஆசி பெற்ற ஜனாதிபதி

கொழும்பு, ஏப். 16

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, இன்று காலை மல்வத்து மகா விகாரைக்குச் சென்று மகா விகாரவம்சிக சியாமோபாலி மகா பீட மல்வத்து தரப்பின் மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவே சிறி சுமங்கல நாயக்க தேரரைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்.

இதன்போது மகாநாயக்க தேரர், செத்பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினருக்கு சிங்கள தமிழ் புத்தாண்டிற்கு தனது ஆசீர்வாதங்களை வழங்கினார். சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ உள்ளிட்ட குழுவினர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

# யானை தாக்கி விவசாயி பலி!

கொழும்பு, ஏப். 16

பொலனறுவை மாவட்டம், மெதிரிகிரியை பகுதியில் காட்டு யானை தாக்கியதில் விவசாயி ஒருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மதிரிகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய விவசாயி ஒருவர், தனது வயல் வேலைகளை முடித்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோதே காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

புதர் மறைவில் நின்றிருந்த காட்டு யானை திடீரென அவரைத் தாக்கியது என்று தெரிவிக்கப்படுகின்றது.

யானையின் தாக்குதலினால் பலத்த காயமடைந்த அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் நான்கு பிள்ளைகளின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மெதிரிகிரியை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# காரைதீவு சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம்

காரைதீவு, ஏப். 16

கிழக்கிலங்கை, காரைதீவு நந்தவன சித்தி விநாயகர் ஆலயத்தின் பஞ்ச குண்டபக்ஷ மகா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.23 மணி முதல் 11.28 வரையிலான சுபமுகூர்த்த வேளையில் நடைபெற உள்ளது.

கும்பாபிஷேக பிரதம குரு சிவாகம வித்யா பூஷணம், சிவாச்சார்ய திலகம், விபுலமணி சிவசிறீ சண்முக மகேஷ்வரக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் மகா கும்பாபிஷேக கிரியைகளை நடத்துகிறார்கள்.

இதன்படி, எதிர்வரும் திங்கட்கிழமை கிரியைகள் ஆரம்பமாகின்றன.

அதனைத் தொடர்ந்து செவ்வாய்க்கிழமை மற்றும் புதன்கிழமை ஆகிய நாட்களில் எண்ணெய்க் காப்பு சாத்துதல் நிகழ்வு காலை 8.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை நடைபெறவுள்ளது. (அ)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் பயணம் செய்த ஓட்டோ விபத்து!

## ஒருவர் பலி! மூன்று பேர் காயம்!!

கொழும்பு, ஏப். 16

வெள்ளவாய - மொனராகலை பிரதான வீதியில் உள்ள புத்தல, உனவட்டுன பகுதியில், ஓட்டோ ஒன்று வான் மீது மோதியதில் ஒருவர் உயிரிழந்ததோடு 3 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் பயணித்த ஓட்டோவே வான் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

அம்பாறையிலிருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்தபோதே இவர்கள் விபத்துக்குள்ளானதாகக் கூறப்படுகிறது.

இதில் ஓட்டோ ஓட்டிச் சென்ற நபர், விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபரின் மனைவி மற்றும் பிள்ளைகள் இருவர் விபத்தில் காயமடைந்து, புத்தல பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

யிரிழந்த நபர் அம்பாறையைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பயணிகளை ஏற்றாமல்...

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நெடுந்தீவு சென்றிருந்த மக்கள் மற்றும் தொழில்துறையினர் 150 இற்கும் அதிகமான மக்கள் சேவையை பெற காத்திருந்தனர்.

ஆனால், நெடுந்தாரகை படகுக் குழுவினர், சட்டத்தின் பிரகாரம் எனக்கூறி 100 பயணிகளை ஏற்றிய நிலையில், மிகுதி 50 இற்கும் மேற்பட்ட பயணிகளை, நெடுந்தீவு மாவிலி துறைமுகத்தில் விட்டுச் சென்றனர்.

இதனால் பாதிக்கப்பட்ட பயணிகள், தனியார் படகொன்றை 35 ஆயிரம் ரூபாவுக்கு வாடகைக்கு அமர்த்தி தமது பயணத்தை மேற்கொண்டதாக கவலை வெளியிட்டுள்ளனர். (அ)

## வடமாகாண திணைக்கள...

இதனால் பொதுமக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க வேண்டும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தை மக்கள் ஆட்சியில் அமர்த்தியதன் பிரதான நோக்கம் ஊழல் மற்றும் இலஞ்சத்தை ஒழிப்பதாகும். எனவே, இந்தக் குழு முன்னெடுக்கும் கள ஆய்வுகள் மற்றும் விசாரணைகளில் எவ்விதமான அரசியல் தலையீடுகளும் இருக்காது. நீங்கள் முழுமையான சுயாதீனத்துடன் செயற்பட முடியும்.

மாகாண சபைக்கு ஒதுக்கப்படும் நிதி வினைத்திறனான முறையில் செலவிடப்படுகின்றதா என்பதை இக்குழு தொடர்ச்சியாகக் கண்காணிக்க வேண்டும். அத்துடன், அரச அலுவலகங்களில் உத்தியோகத்தர்கள் கடமையில் இல்லாமை மற்றும் சேவைகளை வழங்கத் திட்டமிட்டு இழுத்தடித்தல் போன்ற பொதுமக்களின் முறைப்பாடுகள் குறித்துக் கூடுதல் கவனம் செலுத்தி, அவற்றுக்குரிய தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

தொடர்ந்து நடைபெற்ற இக்கலந்துரையாடலில், விசாரணைகளை முன்னெடுக்கும்போது தொழில்நுட்ப ரீதியான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது குறித்தும், கடந்த காலங்களில் நிலவிய விசாரணைக் குறைபாடுகளை எவ்விதம் நிவர்த்தி செய்வது என்பது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன் மற்றும் விசேட குழுவின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (அ-05)

## சதித் திட்டங்களை...

புதன்கிழமை பிற்பகல் யாழ். தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்றது.

"தையிட்டியில் அடுத்தது என்ன?" எனும் தலைப்பில் 'தையிட்டி ஆக்கிரமிப்பு விகாரையால் நிலமிழந்த தமிழர்கள்' அமைப்பின் ஏற்பாட்டில் இச்சந்திப்பு முன்னெடுக்கப்பட்டது.

தையிட்டி நிலங்களை அளவீடு செய்து விடுவிப்பதாக அமைச்சர் இ.சந்திரசேகர் அண்மையில் அறிவித்திருந்தபோதிலும், அங்கு சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள விகாரையின் நிலைப்பாடு குறித்துத் தெளிவான அறிவிப்புகள் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை. ஒருபுறம் பேச்சுகள் இடம்பெற்றாலும், மறுபுறம் குறித்த விகாரையைப் பதிவு செய்வதற்கான முயற்சிகள் மறைமுகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று இக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

அரசின் இத்தகைய சதித்திட்டங்களை முறியடித்து, ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்களை முழுமையாக மீட்பதற்கான அடுத்தகட்ட நகர்வுகள் மற்றும் சட்டப் போராட்டங்கள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணிகளான வி.மணிவண்ணன், க.சுகாஷ் மற்றும் தையிட்டி காணி உரிமையாளர்கள், அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

## இலங்கையின்...

கூடாது என பிரித்தானிய தமிழர் பேரவை வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து பிரித்தானிய தமிழர் பேரவையினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

இம்முறை ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 61ஆவது கூட்டத்தொடரில் அமெரிக்கா, இஸ்ரேல் - ஈரான் போர் விவகாரங்கள் மிகையான அவதானம் பெற்றிருந்த போதிலும், நாம் முக்கிய இராஜதந்திரிகள் பலரைச் சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தோம்.

இதன்போது இலங்கையின் உள்நாட்டுச் சட்டங்களின் கீழ் நீதி மற்றும் பொறுப்புக்கூறல் செயன்முறையை மட்டுப்படுத்துவதற்கு இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு எதிரான எமது நிலைப்பாட்டினைத் தெரியப்படுத்தினோம்.

சர்வதேச பொறுப்புக்கூறல் செயன்முறைக்குப் பதிலீடாக ஒரு உள்நாட்டு குற்றவியல் நீதிப்பொறிமுறையை நிறுவுவதற்கான இலங்கையின் தந்திரோபாய முயற்சி மற்றும் அதன் நம்பகத்தன்மை குறித்து நாம் வெளிநாட்டு இராஜதந்திரிகளிடன் எமது கரிசனைகளை முன்வைத்தோம்.

அதேபோன்று அரசினாலும், அரச கட்டமைப்புகளினாலும் இழைக்கப்பட்ட பாரதூரமான குற்றங்கள் மற்றும் மீறல்களுக்கு இலங்கையின் உள்நாட்டு குற்றவியல் நீதிப் பொறிமுறைகளின் ஊடாக அர்த்தமுள்ள பொறுப்புக்கூறலை உறுதிசெய்யமுடியாது. இலங்கையின் தந்திரத்துக்கு இசைந்துகொடுத்து சர்வதேச கட்டமைப்புக் கள் தம்மைப் பலவீனப்படுத்திக்கொள்ளக்கூடாது. இவ்வாறானதொரு பின்னணியில் நம்பகமான நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான பாதையில் சில முக்கிய விடயங்கள் உள்வாங்கப்படவேண்டும் என சர்வதேச சமூகத்திடம் வலியுறுத்துகின்றோம்.

முதலாவதாக வலுவான சர்வதேச குற்றவியல் நீதிப் பொறிமுறைகள் நிறுவப்படவேண்டும்.

இரண்டாவதாக உலகளாவிய அதிகார வரம்பெல்லையைப் பயன்படுத்தி அமெரிக்கா, கனடா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளைப்போன்று ஐரோப்பிய ஒன்றியம், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற ஏனைய நாடுகளும் இலங்கையின் போர்க்குற்றவாளிகளுக்கு எதிராகத் தடைகளை விதிக்கவேண்டும்.

சர்வதேச சமூகத்தின் வலுவான தலையீட்டின் மூலமே இலங்கையில் நீதியை உறுதிப்படுத்தவும், மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கவும் நிலையான சமாதானத்தைக் கட்டியெழுப்பவும் முடியும்-என்றுள்ளது.

## நிலக்கரி மோசடி தொடர்பில்

# சம்பந்தப்பட்ட அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்துவோம்!

கொழும்பு, ஏப். 16

நிலக்கரி மோசடி தொடர்பில் வலுசக்தி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை அரசாங்கம் தோற்கடித்து அமைச்சரை பாதுகாத்தாலும் நிலக்கரி மோசடியுடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்துவோம். அது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

வலுசக்தி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

நிலக்கரி கொள்வனவின்போது பாரிய மோசடி இடம்பெற்றுள்ளதாக நாங்கள் ஆரம்பித்தில் இருந்து தெரிவித்து வந்தோம். என்றாலும் அரசாங்கம் அதனை மறுத்துவந்தது. அதனால் விடயத்துக்கு பொறுப்பான மின் வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்திருந்தன அதன் பிரகாரம் நம்பிக்கையில்லா பிரேரணை கடந்த 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

பாராளுமன்றத்தில் அரசாங்கத்தக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருப்பதால், அரசாங்க்துக்கு எதிராக எந்த பிரேரணை கொண்டு வரப்பட்டாலும் அதனை அரசாங்கம் தோற்கடித்துவிடும் என்பது எமக்கு தெரியும். என்றாலும் இந்த நிலக்கரி கொள்வனவில் பாரிய மோசடியில் இடம்பெற்றிருப்பதை மக்களுக்கு தெளிவுபடுத்த முடியுமாகி இருந்தது. ஊழல் மோசடிகளுக்கு இடமளிப்பதில்லை என ஆட்சிக்கு வந்த இவர்கள், தற்போது நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவளித்து, மோசடிக்கு ஆதரவளித்திக்கிறார்கள் என்பதை மக்கள் கண்டுகொண்டுள்ளனர்.

மேலும் அரசாங்கம் அவர்களுக்கு இருக்கும் பெரும்பான்மையை பயன்படுத்திக்கொண்டு நம்பிக்கையிலா பிரேரணையை தோற்கடித்ததன் மூலம் இந்த பிரச்னை முடிவடையப்போவதில்லை. நிலக்கரி மோசடியுடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் சட்டத்துக்கு முன் நிறுத்த தேவையான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். இந்த நிலக்கரி கொள்வனவு மோசடி, அமைச்சர் குமார ஜயகொடியினால் மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையல்ல. இதற்கு ஒத்துழைப்பு, ஆதரவு வழங்கிய ஜனாதிபதி உள்ளிட்ட முழு அமைச்சரவையும் இதற்கு பொறுப்புக்கூற வேண்டும்.

ஏனெனில் இலங்கை வரலாற்றில் இடம்பெற்ற பாரிய மோசடியாகவே இதனை நாங்கள் பார்க்கிறோம். தரம் குறைந்த நிலக்கரி கொள்வனவால் நாட்டுக்கு 22 பில்லியன் ரூபா நேரடியாக நட்டம் ஏற்பட்டுள்ளபோதும் இதன் மறைமுக நட்டம் தொடர்பில் இன்னும் கணக்கிடப்படவில்லை. அதேநேரம் நிலக்கரி கொள்வனவில் மோசடி இடம்பெற்றிருப்பதை அரச கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு அறிக்கையிலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

எனவே அரசாங்கம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை பயன்படுத்திக்கொண்டு, மோசடிகாரர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுத்தாலும் நிலக்கரி மோசடியுடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் சட்டத்துக்கு முன் நிறுத்துவோம்-என்றார். (அ)

## இலங்கைக்கான ஆதரவு...

ஐக்கிய நாடுகள் சபைக்கான அலுவலகத்தின் ஊடாக இலங்கைக்கு தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதாகவும் உறுதியளித்தார். இலங்கையின் தூதுவரும் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியுமான சுமித் தஸநாயக்க கடந்த திங்கட்கிழமை (13) ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க்கை சந்தித்துக் கலந்துரையாடினார். இச்சந்திப்பின்போது இலங்கையின் அண்மையகால முன்னேற்றங்கள் தொடர்பில் ஆணையாளருக்கு விளக்கம ளித்த நிரந்தர வதிவிடப் பிரதிநிதி தஸநாயக்க, இருதரப்பு நலன் சார்ந்த பல்வேறு விடயங்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடினார்.

அதேபோன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் ஆகியவற்றுடன் இலங்கை தொடர்ந்து பேணிவரும் ஒத்துழைப்பு மற்றும் ஆக்கபூர்வமான ஈடுபாட்டையும் தஸநாயக்க மீள உறுதிப்படுத்தினார்.

அதேவேளை இலங்கையின் ஒத்துழைப்பு தொடர்பில் பாராட்டை வெளிப்படுத்திய ஆணையாளர் வோல்கர் டேர்க், தமது அலுவலகத்தின் ஊடாக இலங்கைக்கு தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதாகவும் உறுதியளித்தார்.

## அமெரிக்காவின் செய்தி...

திட்டங்கள் குறித்து இந்த விஜயத்தின்போது ஆலோசிக்கப்படவுள்ளது.

கடந்த வார இறுதியில் இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற முதற்கட்டப் பேச்சுவார்த்தைகளில் இறுதி உடன்பாடு எட்டப்படாத நிலையில், பாகிஸ்தானின் இந்த இராஜதந்திர முயற்சி முன்னெடுக்கப்படுகிறது.

மத்திய கிழக்கில் நிலவும் மோதல் சூழலை முடிவுக்குக் கொண்டுவர பாகிஸ்தான் தீவிர மத்தியஸ்த முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 11 வயது சிறுமி...

இது குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

அந்தவகையில் குறித்த சந்தேக நபரை வட்டுக்கோட்டை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

சிறுமி பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## பெற்றோலுடன்...

பெற்றோல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கப்பலில் இருந்து பெற்றோலை தரையிறக்கும் பணி உடனடியாக முன்னெடுக்கப்பட்டதாக, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது. (அ)

## வாந்தி எடுத்த...

மணியளவில் மீண்டும் வயிற்றுவலி ஏற்பட்டதுடன் வாந்தி எடுத்துள்ளார். இந்நிலையில் அவரை அதிகாலை நான்கரை மணிக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று மதியம் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

குடல்வளரி ஏற்பட்டதால் வயிற்றுவலி ஏற்பட்டதாகவும், அதனால் வாந்தி எடுத்தவேளை சுவாசக் குழாயினுள் வாந்தி சென்ற காரணத்தால் மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# நாட்டில் டிஜிற்றல் அறிவு 67 வீதமாக உயர்வடைவு!

## கணினியை விஞ்சிய ஸ்மார்ட் கைபேசி

கொழும்பு, ஏப். 16

இலங்கையர்களிடையே கணினிகளை விட கையடக்கத் தொலைபேசிகள் வழி சார்ந்த டிஜிற்றல் பயன்பாடு அதிகமாக இருப்பதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் மக்கள்தொகை மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்புத் தரவுகளின் அடிப்படையில், இலங்கையின் கணினி மற்றும் டிஜிற்றல் அறிவு சார்ந்த நிலை குறித்த தகவல்களிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, இலங்கையின் ஒட்டுமொத்த கணினி அறிவு வீதம் 34.7 வீதமாக பதிவாகியுள்ளது.

இருப்பினும், ஸ்மார்ட் கைபேசிகளின் பயன்பாட்டையும் உள்ளடக்கிய டிஜிற்றல் அறிவு வீதமானது கணினி அறிவை விட இரண்டு மடங்கு அதிகமாக, அதாவது 67.6 வீதமாக காணப்படுகிறது.

இது இலங்கையர்களிடையே கணினிகளை விட கையடக்கத் தொலைபேசிகள் வழி சார்ந்த டிஜிற்றல் பயன்பாடு அதிகமாக இருப்பதை உறுதிப்படுத்துகிறது.

வசிப்பிடத் துறைகளின் அடிப்படையில் நோக்கும்போது, நகர்ப்புறங்களில் வசிப்பவர்களிடையே கணினி அறிவு 47.0 வீதமாகவும், டிஜிற்றல் அறிவு 76.8 வீதமாகவும் உயர்ந்து காணப்படுகிறது.

இதற்கு மாறாக, தோட்டப்புறங்களில் கணினி அறிவு மிகக் குறைவாக 14.9 வீதமாகவும், டிஜிற்றல் அறிவு 50.2 வீதமாகவும் உள்ளது. கிராமப் புறங்களில் கணினி அறிவு 33.0 வீதமாகவும், டிஜிற்றல் அறிவு 66.4 வீதமாகவும் பதிவாகியுள்ளது.

கொழும்பு மாவட்டம் இலங்கையிலேயே மிக உயர்ந்த கணினி அறிவு வீதத்தையும் (51.0 வீதம்), மிக உயர்ந்த டிஜிற்றல் அறிவு வீதத்தையும் (78.7 வீதம்) கொண்டு முதலிடத்தில் உள்ளது.

கணினி அறிவில் கம்பஹா (42.7 வீதம்) மற்றும் கண்டி (38.5 வீதம்) மாவட்டங்கள் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுகின்றன.

கணினி அறிவு மிகக் குறைவாகக் காணப்படும் மாவட்டமாக மன்னார் (19.5 வீதம்) பதிவாகியுள்ளது.

டிஜிற்றல் அறிவைப் பொறுத்தவரை, கொழும்புக்கு அடுத்ததாக கம்பஹா முன்னிலையில் இருக்க, மிகக் குறைந்த வீதம் நுவரெலியா (56.4 வீதம்) மாவட்டத்தில் பதிவாகியுள்ளது.

எவ்வாறாயினும், நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் டிஜிற்றல் அறிவு வீதம் 50 வீதத்திற்கும் அதிகமாகவே காணப்படுகின்றது. (அ)

## வடக்கு அபிவிருத்தி திட்டங்கள் ஆளுநர் தலைமையில் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஏப். 16

தற்போதைய நிலைமைகளில் மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்களைத் தடையின்றி முன்னெடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை காலை நடைபெற்றது.

நிர்மாணப் பொருள்களின் விலையேற்றம் காரணமாக ஒப்பந்ததாரர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அதனால் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. இந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் வகையில், விலை மீளாய்வு உள்ளிட்ட பொருத்தமான மாற்று நடவடிக்கைகளைப் பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியல்) ஊடாக உடனடியாக மேற்கொள்வதற்கு இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

மேலும், “டித்வா” இயற்கைப் பேரிடரால் பாதிப்புக்குள்ளான உட்கட்டமைப்புகளின் மீள்கட்டுமானப் பணிகளைத் துரிதமாக முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான நிர்வாகச் செலவினங்கள் மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பிலும் கௌரவ ஆளுநரால் அதிகாரிகளுக்கு விசேட வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாணப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட அரச உயர் அதிகாரிகள் பலரும் பங்கேற்றனர். (அ)



## பெண் மருத்துவருக்கு பாலியல் தொல்லை நோயாளி ஒருவர் பொலிஸாரினால் கைது!

கொழும்பு, ஏப். 16

களுத்துறை - நாகொட வைத்தியசாலையில் பணியாற்றும் பெண் வைத்தியர் ஒருவருக்குப் பாலியல் தொல்லை கொடுத்த குற்றச்சாட்டில் நோயாளி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தே நபர் மத்துகம பிம்புர வைத்தியசாலையில் சிகி ச்சை பெற்று வந்த நிலையில், மேலதிக சிகிச்சைக்காக நாகொட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

பெண் வைத்தியர் சந்தேக நபரின் இரத்த அழுத்தத்தைப் பரிசோதிக்கச் சென்றபோது, அவர் பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இது குறித்து வைத்தியர் பொலிஸில் முறைப்பாடு செய் யப்போவதாகத் எச்சரித்துள்ளார். எனினும், மீண்டும் பரி சோதனை மேற்கொண்டபோது இரண்டாவது முறையும் அந்த வைத்தியருக்கு அவர் பாலியல் தொல்லை கொடுத்த தாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் குறித்து முறைப்பாடு கிடைத்ததையடுத்து, பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளனர். (அ)

## மன்னார் கடலில் விபத்து; மீனவர் ஒருவர் உயிரிழப்பு

மன்னார், ஏப். 16

மன்னார் கடல் பகுதியில் நேற்று இரு மீன்பிடிப் படகுகள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதில் மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.


விபத்தில் படகுகள் இரண்டும் பலத்த சேதமடைந்த நிலையில் படகில் இருந்த மீனவர்கள் கடலில் தூக்கி வீசப்பட்டனர்.

இந்நிலையில் கடலில் காணாமற்போயிருந்த மீனவர் நீண்ட நேர தேடுதல் நடவடிக்கையின் பின்னர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த மீனவரின் உடல் மன்னார் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த மற்றொரு மீனவர் சிகிச்சைக்காக மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ)

## மன்னாரில் செஞ்சிலுவைச் சங்கத்தின் தன்னார்வ பணியாளர்கள் போராட்டம்



மன்னார், ஏப். 16

இலங்கை செஞ்சிலுவைச் சங்க மன்னார் கிளையில் நிர்வாக சிக்கல் நிலவுவதாக தெரிவித்து மன்னார் கிளையுடன் இணைந்து பணியாற்றும் தன்னார்வ பணியாளர்கள் நேற்று போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக, மன்னார் மாவட்டத்தில், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தில் இணைந்து 50ற்கும் மேற்பட்ட இளைஞர்கள் தன்னார்வப் பணியாளர்களாக சேவையாற்றி வந்தனர்.

இதுவரை காலமும், செஞ்சிலுவைச் சங்க மன்னார் கிளையின் அங்கத்தவர்களாக தம்மை இணைத்துக் கொள்ளும்படி கோரிக்கை விடுத்து வந்தபோதிலும், எந்தவொரு நிர்வாகமும் தங்களுடைய கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை என தெரிவித்து நேற்று காலை போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நேற்று காலை 10.00 மணியளவில், மன்னார் பொது நூலகத்திற்கு முன்பாக ஒன்றுகூடிய தன்னார்வ பணியாளர்கள், வாயை சிவப்பு துணியால் கட்டியவாறு, பதாகைகளை ஏந்தியிருந்ததுடன் மன்னார் மாவட்ட செயலகம் வரை ஊர்வலமாக சென்றனர்.

அதனைத் தொடர்ந்து, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனை சந்தித்து தமது கோரிக்கைகளை முன்வைத்ததுடன் மகஜரை கையளித்தனர். (அ)

# தவறுகளிலிருந்து பாடம் கற்று முன்னோக்கிப் பயணிப்போம்!



## நாமல் ராஜபக்ஷ புத்தாண்டில் சூளுரை

கொழும்பு, ஏப். 16

“ஒவ்வொருவரும் தவறு செய்வது இயல்பு. நாம் அந்தத் தவறுகளைப் புரிந்து கொண்டு, அவற்றிலிருந்து பாடம் கற்றுக் கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும்” என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு தங்காலை, கால்டன் இல்லத்தில் நடைபெற்ற புத்தாண்டு கொண்டாட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே நாமல் இதனைத் தெரிவித்துள் ளார்.

சமூகமும் கடந்த காலத் தவறுகளை அடையாளம் கண்டு, அதேவேளை கலாசார விழுமியங்களைப் பாதுகாத்து முன்னேற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு என்பது எமது பகிரப்பட்ட கலாசார மரபாகும். இதனைப் பாதுகாத்து அடுத்த சந்ததியினருக்குக் கடத்தவேண் டியது அவசியமானது என அவர் சுட்டிக் காட்டினார்.

நாடு தற்போது ஒரு சவாலான கால கட்டத்தை எதிர்கொண்டுள்ளபோதிலும், ஒற்றுமையுடனும் நேர்மறையான சிந்தனையுடனும் அதனை முறியடிக்க முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இளைஞர்கள் மீதான நம்பிக்கை குறைந்து வருவது குறித்துக் கவலை வெளியிட்ட நாமல் ராஜபக்ஷ, நாட்டின் அபிவிருத்திக்கு இளைஞர்களின் பங்களிப்பை உறுதிப்படுத்துவதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்படவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

நாட்டின் வரலாற்றில் இடம்பெற்ற ஒரு சில தனிமைப்படுத்தப்பட்ட வன்முறைச் சம்பவங்களை வைத்து ஒட்டுமொத்த இளைஞர் சமுதாயத்தையும் மதிப்பிடக்கூடாது.

இலங்கையின் எதிர்காலம் இளைஞர்களின் திறமைகளைப் பயன்படுத்துவதிலும், தேசிய ஒற்றுமையைப் பலப்படுத்துவதிலுமே தங்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org